**D.V.C.No. 3/2017**
**P. W.1**

| | | |
|---|---|---|
| திருமதி. மீனா | க/பெ. சுடலைக்கண் | Date: 30.04.2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு

**<u>3,4 எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக நான்குநேரி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் மீது வரதட்சனை கொடுமை செய்ததாக புகார் கொடுக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டு மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவிலும் 3,4 எதிர்மனுதாரர்கள் எனது கணவரின் மாமா, அத்தை என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இந்த மனுவில் முதல் விசாரணையிலும் திருமண சமயத்தில் எனக்கு 25 பவுன் தங்கை நகைகள் கொடுத்தாகவும், ரூ.25,000/- ரொக்கம் கொடுத்ததாகவும், ரூ.2,00,000/- மதிப்புள்ள சீதன பொருட்கள் கொடுத்ததாகவும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி விபரங்களை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவிலும் சொல்லியுள்ளேன்.

2. முதல் விசாரணையில் பத்தி 4ல் 2ம் எதிர்மனுதாரர் கஸ்தூரி கூடுதல் வரதட்சனை கேட்ட விபரங்களை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவிலும் சொல்லியுள்ளேன். அதே போல் 8வது பத்தியில் எனது தங்கையின் திருமணத்திற்காக வைத்திருந்த 20 பவுன் நகையை கடந்த 21.04.2014,22.04.2014 மற்றும் 23.04.2014 ஆகிய நாட்களில் களக்காடு முத்தூட் வங்கியில் அடமானம் வைத்து ரூ.1,92,817/-ம், அக்கம் பக்கம் கடன் வங்கி ரூ. 4 லட்சமும் ஆக மொத்தம்

ரூ.5,92,817/-ம் புரட்டி என்னிடம் தந்தார்கள் என்றும் அந்த தொகையை 1ம் எதிர்மனுதாரர் அறிவுறுத்தியபடி 3ம் எதிர்மனுதாரரிடம் நான் கொடுத்தேன் என கூறியுள்ள விபரங்களை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவிலும் சொல்லியுள்ளேன்.

3. களக்காடு முத்தூட் வங்கியில் நகைகள் அடகு வைத்ததற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். ரசீது தாக்கல் செய்துள்ளேன். 3ம் எதிர்மனுதாரரிடம் 25 பவுன் நகைகளை களக்காட்டில் உள்ள எனது வீட்டில் வைத்துதான் கொடுத்தேன். என்னிடம் டாலர் ஜெயின், நெக்லஸ், கம்மல், வளையல், இருந்தது. அதைதான் கொடுத்தேன். அந்த நகைகளின் அளவு தெரியுமா என்றால் டாலர் ஜெயின் 6 பவுன், நெக்லஸ் 3 பவுன், மோதிரம் 4 கிராம், வளையல் 3 பவுன், 3 ஜோடி கம்மல் 1.1/4 பவுன் மொத்தம் இருக்கும். 3ம் எதிர்மனுதாரரிடம் ரூ.5,92,817/- கொடுத்த விபரத்தை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவிலும் சொல்லியுள்ளேன்.

4. முதல் விசாரணை 11வது பத்தியில் 3ம் எதிர்மனுதாரர் எனக்கு என் பெற்றோர் கொடுத்த சீர் சீராட்டுகளை திருடி எடுத்துச் சென்றதோடு நான் வீட்டில் வைத்திருந்த ரூ.1000/- பணத்தையும் திருடி சென்றுவிட்டார் என அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. 3ம் எதிர்மனுதாரர் எதில் வந்தார், யாருடன் வந்தார் என்றால் எனக்கு தெரியவில்லை. 3ம் எதிர்மனுதாரர் எனது வீட்டில் இருந்து பொருட்களையும், ரூ.1000/- பணத்தையும் திருடி சென்றதாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்துள்ளேன். மகளிர் காவல் நிலையத்தில்தான் கொடுத்தேன். சாட்சி தற்போது வருடம்

ஆவதால் சரியாக ஞாபகமில்லை என சாட்சியம் அளிக்கிறார். உண்மையில் 3ம் எதிர்மனுதாரர் நான் சொல்வது போல் நடந்திருந்தால் காவல் நிலையத்தில் உடனடியாக புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல.

5. 11வது பத்தியில் இன்றுவரை எனது ரூ.2 லட்சம் மதிக்கத்தக்க சீர் சீராட்டுகளை 3ம் எதிர்மனுதாரரிடமே உள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். இது சம்பந்தமாக அவர் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவிலும் ரூ. 2 லட்சம் மதிக்கத்தக்க சீர் பொருட்கள் 3ம் எதிர்மனுதாரரிடமே உள்ளதாக சொல்லியுள்ளேன். 12 வது பத்தியில் 3ம் எதிர்மனுதாரர் அடிக்கடி எனக்கு போன் செய்து மரியாதையாக சுடலைக்கண்ணுக்கு டைவர்ஸ் கொடுத்துவிடு , அவனுக்கு வேறு திருமணம் செய்து வைக்க போகிறேன் என்று என்னை மிரட்டினார் என சொல்லியுள்ளேன். இது சம்பந்தமாக அவர் மீது தனியாக வேறு புகார் கொடுக்கவில்லை. 14 வது பத்தியில் எதிர்மனுதாரர்கள் உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் காயங்களை விளைவித்து வருகிறார்கள் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எந்த இடத்தில் காயத்தை ஏற்படுத்தினார்கள் என்றால் முதுகில் ஏற்படுத்தினார்கள்.

6. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு களக்காடு சுகம் மருத்துவமனையில் சிகிட்சை எடுத்துக் கொண்டேன். சிகிட்சை எடுத்ததற்காக ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. உண்மையில் எதிர்மனுதாரர் தாக்கி காயம் ஏற்பட்டிருந்தால் சிகிட்சை எடுத்ததற்கான ஆவணங்கள் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக மருத்துவமனை சென்று சிகிட்சை எடுத்ததாக பொய் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் ஏற்பட்ட

பிரச்சினையில் முதன் முதலில் களக்காடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அதில் எங்கள் இரண்டு பேரையும் அழைத்து விசாரித்து சமாதானம் செய்தார்கள் என்றால் சரிதான்.

7. நான்குநேரி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுப்பதற்கு முன்பாக 1ம் எதிர்மனுதாரர் என் மீது திருநெல்வேலி 4 வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் ஐ.டி.ஓ.பி. 210/2015 விவாகரத்து கோரி மனு தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கிலும் நான் ஆஜராகி எதிர் வழக்குரை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அதன் பிறகுதான் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகார் மனுவில் எதிரிகளை அழைத்து விசாரணை செய்யவில்லை. அதனால் வழக்கறிஞர் மூலமாக மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு புகார் அனுப்பினேன் என்றால் சரிதான். நான்குநேரி நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்த பிறகுதான் நான் கொடுத்த புகாரில் வழக்கு தாக்கல் செய்த விபரம் தெரியும் என்றால் சரிதான்.

8. எனக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் கிறிஸ்தவ பெந்தேகோஸ்தே முறைப்படி திருமணம் நடந்தது என்றால் சரிதான். பொதுவாக பெந்தேகோஸ்தே முறைப்படி நடக்கும் திருமணத்தில் நகைகளோ, வரதட்சனையோ வாங்குவதில்லை என்றால் சரிதான். திருமணத்தின் போது 25 பவுன் நகை போட்டதாக திருமண புகைப்படத்தை பார்த்தால் தெரியும் என்றால் சரிதான். எங்கள் திருமணத்திற்கு 3,4 எதிர்மனுதாரர்கள் வரவில்லை. எங்கள் திருமணத்தை பாஸ்டர் தங்கமணி நடத்தி வைத்தார். சம்பவ காலத்தில் 1ம் எதிர்மனுதாரர் கிறிஸ்தவ சபையில் ஊழியராக வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான். 1,2 எதிர்மனுதாரர்கள் பிரச்சினை செய்தது தொடர்பாக பாஸ்டர் தங்கமணியிடம்

சொல்லியுள்ளேன்.

9. கழுகுமலையை சேர்ந்த ஆசிரியர் கவிதா என்பவரை எனக்கு தெரியும். அவர் அடிக்கடி களக்காடு வருவதால் எனக்கு பழக்கம். கவிதா என்னிடம் போன் மூலம் எனது கணவரை வெறுக்கும் விதமாக என்னிடம் பேசினார் என்றால் சரியல்ல. நான் அதை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. 4ம் எதிர்மனுதாரர் பேசியதைதான் பதிவு செய்தேன். அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சாட்சி தற்போது ஞாபகமில்லை என கூறுகிறார். திருமணம் முடிந்து 2,3 மாதத்தில் எனக்கும் எனது கணவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்து விட்டோம் என்றால் சரிதான். தற்போது வரை நாங்கள் தனித்தனியாகத்தான் உள்ளோம் என்றால் சரிதான். அவருடன் சேர்ந்து வாழக்கோரி நடவடிக்கை எடுக்கவில்லை. 1ம் எதிர்மனுதாரருக்கு வசதியும், வருமானமும் இல்லை என்பதால் பிரிந்து சென்றேன் என்றால் சரியல்ல.

10. எனக்கும் எனது கணவருக்கும் நடந்த பிரச்சினைக்கு பிறகு எனது கணவர் 3ம் எதிர்மனுதாரர் சபைக்கு சேர்ந்தார் என்றால் சரியல்ல. அதற்கு முன்பாகவே சேர்ந்து விட்டார். பாஸ்டர் தங்கமணி மற்றும் 3ம் எதிர்மனுதாரர் வெவ்வேறு சபையை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் பேசுவது இல்லை என்றால் சரிதான். இந்த மனுவில் 3,4 எதிர்மனுதாரர்கள் விலாசமாக புதிய எருசலேம் சபை, மூலைக்கரைப்பட்டி என கூறியுள்ளேன் என்றால் சரிதான். 3,4 எதிர்மனுதாரர்கள் எனது கணவருக்கு தாய் வழி சொந்தம். எனது கணவரின் தந்தைக்கு தென்னிமலையாகும். எனது கணவரின் தந்தை பெயர் சுப்பையா. 3,4 எதிர்மனுதாரர்கள் எனது கணவருக்கு தூரத்து சொந்தமாகும்.

11. பாஸ்டர் தங்கமணிக்கும் 3ம் எதிர்மனுதாரருக்கும் பிடிக்காது என்றாலும், பாஸ்டர் தங்கமணி தூண்டுதல் பேரில் 3,4 எதிர்மனுதாரர்கள் எனது கணவரின் உறவினர்கள் என பொய்யாக சொல்லி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது திருமண சமயத்தில் போடப்பட்ட நகைகளை 3ம் எதிர்மனுதாரரிடம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. 3,4 எதிர்மனுதாரர்கள் என்னிடம் வரதட்சனை கேட்டு கொடுமை செய்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் ஒரு சங்கதிகளையும், அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவில் வேறு சங்கதிகளையும் கூறிவிட்டு முன்னுக்குபின் முரணமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சுத்த கரங்களுடன் நீதிமன்றத்தை அனுகவில்லை என்பதால் 3,4 எதிர்மனுதாரர்களை பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

Taken down me in open court in the
presence of the accused read over to
the deponent and admitted by him/her
to be correct. MOSES JEBASINGH

Digitally signed by MOSES JEBASINGH
Date: 2026.04.30 13:11:10 +0530

Judicial Magistrate,
Valliyoor.